DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : நிகிலன் | Father/Husband Name : விஜயராஜன் |
| Age : 35 | Village : மதுரை |
| Taluk : | Calling : அரசு மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Feb 4, 2026

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் தற்போது மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன்.

2. நான் சாத்தூர் அரசு மருத்துவமனையில் 21.03.2021ம் தேதி பணியில் இருந்த போது காலை 09.00 மணிக்கு சுமார் 40 வயதுடைய பாக்கியலட்சுமி என்பவரை அவருடைய மகள் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரை விசாரித்த போது தெரிந்த 3 நபர்கள் கை, கதிர் வெட்டக்கூடிய அருவாள் கம்பை வைத்து அவருடைய வீட்டில் வைத்து காலை 08.00 மணிக்கு தாக்கப்பட்டதாக கூறினார்.

3. அவரை பரிசோதித்த போது அவருக்கு வலது கையில் 5X2 செ.மீ. ஒரு காயமும், இடது முழுங்கையில் 1X1 செ.மீ அளவில் சிறிய சிராய்ப்பு காயமும் இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்டிருந்த காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **(காயச் சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அந்த நபர் என்னிடம் கூறியது போல் அவருக்கு காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

4. காயம்பட்ட நபர் அவருக்கு ஏற்பட்டிருந்த காயத்தை அவருக்கு அவரே ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பு உண்டு என்றால் வாய்ப்பு இல்லை. காயம்பட்ட நபர் அவருக்கு ஏற்பட்டிருந்த காயத்தை அவரே ஏற்படுத்திக் கொண்டு பொய்யான விபரத்தை கூறி எங்களுடைய மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Feb 4, 2026 4:40 PM

S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.02.04 18:30:32 +0530

Judicial Magistrate 2, Sattur